# தைப்பொங்கல் தமிழரின் விழா



தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் தமிழரின் பெருமைக்குரிய விஞ்ஞான விழாவாகும்.

இன்று நாம் பல பண்டிகைகளைக் கொண்டாடும் போது அது சடங்காசாரங்களுக்குள் வட்டமிடப்பட்ட வேறுபாடுகளை உள்ளடக்கியதாக காணப்படுவதை அவதானிக்கின்றோம்.

ஆனால், சடங்காசார முறைமைக்குள் சிக்குப்படாத பண்டிகையாக உள்ள தைப்பொங்கல் விழாவையும் கட்டுப்பெட்டித்தனமாக ஒரு வரைமுறைக்குள் கொண்டு வருவது வரவேற்கக் கூடியதல்ல.

தைப்பொங்கல் சைவர்களுக்குரிய விழாவெனக் காண்பிக்க முனைவது சமூகப் பிளவுகளை ஏற்படுத்தக் கூடியது.

தைப்பொங்கல் விழா தமிழரின் விழா- அதுதான் உண்மை.

உலகத் தமிழினமே பெருமையோடு கொண்டாடும் இந்த விழாவை நிம்மதியாக ஈழத் தமிழர் கொண்டாட முடியாத இன்றைய சூழலில்- நாம் தைப்பொங்கல் பற்றி நோக்குகின்ற போது எமது இன்றைய நிலை பற்றியும் பார்த்துச் செல்வது பொருத்தமாக இருக்கும்.

தமிழரின் தாயக மண்ணில் தமிழ்மக்கள் அல்லல்படுத்தப் படுகின்றனர்.

சிங்களப் பேரினவாதம் தமிழின அழிவை இடைவெளியில்லாமல் செய்து வரும் நிலையில் தமிழ் மக்களிடம் துன்பம்தான் பொங்கி வழிகின்றது.

எனினும் நாம் ஒன்றாக இருக்க வேண்டும்- அதுதான் எமக்குப் பலம் என எமது முன்னோர் வழிவழியாகக் கடைப்பிடித்து வந்த பண்டிகைகளும், அவற்றின் வழியாகச் சொல்லப்பட்ட விஞ்ஞானத்தையும் நாம் ஆராய்ந்து அறியத் தவறி, பட்டும் பீதாம்பரமும் பளபளக்க போலிகளுக்குள் முடங்கிப் போகும் நிலையைத் தேடி அரவணைத்துள்ளோம்.

இதனை எவ்வளவு தூரம் நாம் ஒத்துக் கொள்ளப் போகிறோமோ தெரியவில்லை.
ஆனால், இயன்றளவும் ஒவ்வொருவரிடமும் ஆய்வு செய்யும் பண்பும் அரசியல் ரீதியான சிந்தனையும் இருக்க வேண்டும்.

சூரியனுக்கு நன்றி செலுத்தும் விழாவான தைப்பொங்கலை தமிழர் கொண்டாடும் போது இந்தப் பண்டிகைக்குள்ளால் சொல்லப்படும் அறிவியலைப் பற்றி நாம் எவ்வளவு உள் வாங்கினோம்?



மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னெனச் சொல்கின்றோம். அதனை நிறுவ கையில் போதிய ஆதாரம் இல்லை.

ஆனால், பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதென்பதை தொடராக பண்டிகையைக் கொண்டாடும் முறையைப் பார்க்கின்ற போதும் பழந்தமிழ் இலக்கியங்களில் தைப்பொங்கல் பற்றி குறிப்பிடப்பட்டிருப்பதை வைத்தும் நாம் உண்மைகளை அறிந்து கொள்ளலாம்.

பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் சூரியனுக்கும் பூமிக்கும்



இடையில் உள்ள தொடர்பை தமிழன் அறிந்துள்ளான்.

இன்று உலக விஞ்ஞானிகள் கோள மண்டலத்தை சூரியக் குடும்பமென வகைப்படுத்தியுள்ளனர். இது பற்றி ஆதாரபூர்வமாக ஆய்வு செய்து வெளியிட்டுள்ளனர்.

சூரியன் மனிதனால் போற்ற வேண்டிய இயற்கைக் கடவுள்- சூரியன் இல்லையென்றால் உண்ண உணவில்லை.

எனவே, நாம் சூரியனுக்கு நன்றி செலுத்த வேண்டும் என்ற பண்பும் கண்டுபிடிப்பும் தமிழனிடம் இருந்துள்ளது. எனவே இது தமிழரின் விஞ்ஞான விழா என்பதிலும் ஐயப்பட எதுவுமில்லை.

தைப்பொங்கலன்று சூரிய வழிபாடு செய்து இனிப்பான பொங்கலைப் பொங்கி அயலவருடன் கூடி உண்பதும்- நாம் ஒன்றுபட்டு வாழ்வதுதான் எமக்குப் பலம் என்பதை நினைவூட்டுவதாக இல்லையா?

எந்தக் காலத்தில் தொடங்கியதெனச் சொல்ல முடியாத மிகவும் தொன்மையான பொங்கல் விழா தமிழனை பிரிந்திருக்க வேண்டாம் என்பதற்காகத் தான் நெல்லரிசியும் பாலும் கரும்புச் சாறும் சேர்த்துப் பொங்கலிட்டு இனிப்பாகப் பரிமாறுகின்றனர்.

சேர்ந்திருப்பது இனிப்பானதெனச் சொல்வதுதான் இதற்குள் இருக்கும் மாறுபடாத செய்தியாகும்.

நமக்குத் தெரியக் கூடியதாக நடந்தவற்றைப் பார்ப்போம்.

தேவாலயங்களிலும் பள்ளிவாசல்களிலும் தைப் பொங்கலைப் பொங்கினார்கள். மதக் கோட்பாடுகளுக்குள் உட்படாமல் எந்த மதத்தைத் தழுவுகின்றவரும் தமிழரின் பெருமைக்குரிய விழாவாக தைப்பொங்கலைப் பொங்கினார்கள்.

அப்படிச் செய்வதுதான் சரியானதும் ஆரோக்கியமானதும் சமூக ஒற்றுமையைப் பலப்படுத்துவதும் ஆகும்.

இதனையே தொடர்ந்தும் கடைப்பிடிப்பது வரவேற்கக் கூடியதே. ஆகவே நல்லதைப் பற்றிச் சிந்திக்காமல் வேறு மொழியில் பேசுவது நல்லதாகப் படவில்லை.

தைப்பொங்கலை இந்துக்களுக்கு ரிய விழாவாகச் சித்தரிப்பது சமூக ஒற்றுமைக்கு உகந்ததல்ல. அது தமிழரின் பொது விழாவாக இருக்க வேண்டும்.

பொங்கலன்று புதிதுண்பது மட்டுமல்ல அது பொதுவானது என்பதையும் சங்க இலக்கியமான புறநானூற்றில் கருவூர் கந்தப்பிள்ளைச் சாத்தனார் என்ற சங்கப் புலவரின் பாடல் வரிகள் பொங்கிப் புதிதுண்ணலின் ஒற்றுமையை விளக்குகின்றது.

அந்தப் பாடல் இதுதான்:-

அருவி ஆர்க்கும் கழைபயில் நனந்தலைக்

கறிவளர் அடுக்கத்து மலர்ந்த காந்தள்

கொழுங்கிழங்கு மிளிரக் கிண்டிக் கிளையொடு

கடுங்கண் கேழல் உழுதபூமி

நன்னாள் வருபதம் நோக்கிக் குறவர்

உழா அது வித்திய பரூஉக்குரற் சிறுதினை

முந்து விளை யாணர் நாள்புதிது உண்மார்

மரையாண் கறந்த நுரைகொள் தீம்பால்

மான்தடி புழுக்கிய புலவுநாறு குழிசி

வான்கேழ் இரும்புடை கழாஅது, ஏற்றிச்

சார்ந்த விறகின் உவித்த புன்கம்

கூதளங் கவினிய குளவி முன்றில்

செழுங்கோள் வாழை அகல் இலைப்பருக்கும்.

பண்பாட்டு வழிச் சிந்தனையை இப்பாடல் சரியாகச் சொல்லுகிறதல்லவா?

பன்றி உழுத புழுதியில் விதைத்து விளைந்த தினையை அறுவடை செய்து, மலைவாழ் குறக்குடி மக்கள் பொங்கிப் புதிதுண்ண, மான் இறைச்சி அவித்த பானையைக் கழுவாமலே மரை ஆவில் கறந்தெடுத்த பாலை உலை நீராக்கி தினை அரிசியைப் போட்டு பொங்கல் செய்தனர்.

காட்டுச் சந்தன விறகு வைத்துப் பொங்கிய பொங்கலை அகன்ற வாழை இலையிலே பரப்பி ஆறவிட்டு பலரோடும் பகிர்ந்துண்டார்கள் என அந்தப் பாடல் விளக்கம் தருகின்றது.

பொங்கல் விழா பற்றி ஆய்வுக் கட்டுரையொன்றை எழுதிய ஈழத்தின் மூத்த பத்திரிகையாளரும் கவிஞருமான நெடுந்தீவு முத்தையா சிவலிங்கம் மேலே குறிப்பிட்ட இப்பாடலை மேற்கோள் காட்டியிருந்தார்.

இதுபோன்று பல அறிஞர்களும் ஆய்வாளர்களும் பல இடங்களில் ஆணித்தரமாக தமிழரின் பண்பாட்டையும் அறிவியலையும் வெளிப்படுத்தும் வகையிலான தமிழரின் விழாக்கள் பற்றிக் கூறினாலும் இது தொடர்பில் தர்க்கம் செய்வோர் இன்னமும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

எது எப்படியான போதும் சடங்காசார முறைமைக்குள் முடக்கி விடாது தமிழ் மண்ணின் செழுமையோடு நன்றிக் கடனாகச் செய்யப்படும் தமிழர் விழாவைக் கரம்கோர்த்து இணைந்த செயற்பாட்டுக்குள் கொண்டு வருதல் நல்ல பயனை அறுவடை செய்யும் என நம்புவோமாக.

நமது நாட்டில் நாம் நிம்மதியாக வாழும் நிலை இருந்திருந்தால்- அதிகாலை எழுந்து முற்றத்தைப் பெருக்கி, பசுவின் சாணத்தால் மெழுகிக் கோலமிட்டு- நாலுபுறமும் கரும்புகட்டி, மாவிலைத் தோரணம் கட்டி, தலைவாழை இலையில் பச்சை அரிசியோ நெல்லோ பரவி- கும்பம் வைத்து கிழக்கில் கதிரவன் காலிக்கும் போது, சர்க்கரைப் பொங்கல் படைக்கும் போது உழவன் மட்டுமல்ல உழைக்கும் அனைவருக்கும் மனதில் மகிழ்ச்சி பொங்கும்.

பட்டாசு வெடிக்குப் பதிலாக சுடுகுழல் வெடியோசை கேட்டாலும் அதற்குள்ளும் பொங்கல் நடக்கும்.

புலம்பெயர்ந்து உலக உருண்டையில் நாம் எங்கிருந்தாலும் பொங்குவோம். இங்கு முற்றத்தில் பொங்க வழியில்லை.

சமையலறையில் மின்சார அடுப்பில் பொங்கல் பொங்கட்டும்.

எமக்கெல்லாம் இனிப்பான பொங்கல் இன்று ஈழத்தமிழினத்தின் துயர் சுமந்த நிலையில் எப்படிச் சாத்தியம்? எமதினத்துக்கு உயிர் வாழ்வதற்கும் அச்சுறுத்தல்... அலைச்சல் வாழ்வை நிர்ப்பந்தித்துள்ளது.

6ம் பக்கம் பார்க்க